புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்: 04/**TD/DTC/PA/2013/29** புதுச்சேரி, தேதி: 07.07.2014

<u>செய்திக் குறிப்பு</u>

**<u>புதுச்சேரி மங்கலம் கிராமத்தில் இன்று முதல் போக்குவரத்துத் துறையின் புதிய சோதனைச்சாவடி</u>**

புதுச்சேரி அரசு போக்குவரத்து துறையை பொருத்த வரையில் கோரிமேடு எல்லையில் மட்டுமே கடந்த காலங்களில் ஒரு சோதனைச்சாவடி இயங்கி வந்தது. ஒரே ஒரு இடத்தில் சோதனைச் சாவடி இயங்கியதால் புதுவைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் சிறமத்தினை போக்கும் வகையில் புதுச்சேரியின் முக்கிய நுழைவு வாயில்களில் போக்குவரத்துத் துறை மூலம் சோதனைச் சாவடிகளை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2013 அக்டோபர் மாதத்தில் புதுச்சேரியின் வடக்கு எல்லையான கனகசெட்டிக்குளத்தில் ஓர் புதிய சோதனைச்சாவடி அமைக்கப்பட்டது. அதன் பிறகு, புதுவையின் தெற்கு எல்லையான முள்ளோடையில் ஒரு சோதனைச் சாவடியும் அதைத் தொடர்ந்து மதகடிப்பட்டு எல்லையில் ஒரு சோதனைச் சாவடியும் தொடங்கப்பட்டது. இதே போல் காரைக்காலில் வாஞ்சூரில் ஒரு சோதனைச் சாவடியும் புதுச்சேரி போக்குவரத்துத் துறையால் தொடங்கப்பட்டது. புதிதாகத் தொடங்கப்பட்ட இச்சோதனைச் சாவடிகள் மூலம் இது வரை அரசுக்கு சுமார் 2.9 கோடி ரூபாய் வருவாய் வந்துள்ளது.

புதுவை எல்லைகளில் போக்குவரத்து சோதனைச் சாவடிகள் அமைப்பதன் தொடர்ச்சியாக இன்று 7.7.2014ல் புதுச்சேரி மங்கலம் கிராமத்தில் புதிய சோதனைச் சாவடி இயங்கத் துவங்கியுள்ளது. இவை தவிர காரைக்காலில் மற்றுமொரு சோதசை் சாவடியும் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இன்று மங்கலம் கிராமத்தில் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் சிறப்பு வாகனத் தணிக்கை செய்த போது, விதிமுறை மீறல்கள் கண்டு பிடிக்கப்பட்ட பஸ்கள், லாரிகள், கார்கள், டிராக்டர்கள், வேன்கள் போன்ற 18 வாகனங்களுக்கு ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டு, அவற்றில் 7 வாகனங்கள் போக்குவரத்து துறையால் கைப்பற்றப்பட்டன.

வாகன ஓட்டுனர்கள் வாகனங்களின் ஆவணங்களைத் தமது வாகனங்களில் ஆய்வுக்கு வைத்திருந்து போக்குவரத்து துறையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று புதுச்சேரி அரசு போக்குவரத்துத் துறை கேட்டுக்கொள்கிறது.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்